©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 29] சென்னை, புதன்கிழமை, ஜூலை 20, 2022
ஆடி 4, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 31/2022.**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது 2007–ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. 2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில், IA என்ற விளக்கத்திற்கு பின்பு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன:— இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

“**விளக்கம்** IB.— மாநில அரசிற்கு முழுவதும் சொந்தமான மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள கழகமான, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் விற்பனை அளவினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக,—

(அ) வரிசை எண்கள் 1 மற்றும் 3–இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக, மாநிலத்தில் முதலாம் முனை விற்பனையில் வரி விதிப்பிற்கு உள்ளாகும் போது, பின்வரும் முறை பின்பற்றப்படுதல் வேண்டும், அதாவது:—

$$\frac{\text{விற்கப்படும் விலை (அதிகபட்ச சில்லறை விற்பனை விலை)}}{\text{100+மாநிலத்தில் முதலாம் முனை விற்பனையில் விதிக்கப்படும் வரியின் வீதம்.}} \times 100$$

(b) வரிசை எண் 2–இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக, மாநிலத்தில் இரண்டாம் முனை விற்பனையில் வரி விதிப்பிற்கு உள்ளாகும் போது, பின்வரும் முறை பின்பற்றப்படுதல் வேண்டும், அதாவது:—

$$\frac{\text{விற்கப்படும் விலை (அதிகபட்ச சில்லறை விற்பனை விலை)} - \text{கொள்முதலின் போது செலுத்திய தொகை (இது கலால் வரியை உள்ளடக்கும் ஆனால் முதலாம் முனை விற்பனையில் செலுத்தப்பட்ட மதிப்புக்கூட்டு வரியை உள்ளடக்காது)}}{\text{100+மாநிலத்தில் இரண்டாம் முனை விற்பனையில் விதிக்கப்படும் வரியின் வீதம்.".}} \times 100$$

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண். 32/2022.**

**1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XX/1951.

12—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்காக அதன் வரம்புரை நீங்கலாக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;—

"(2) (1)—ஆம் உட்பிரிவின் (a) கூறில் சுட்டப்பட்டுள்ள சம்பளமும், (1—A) உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள சரியீட்டுப் படித்தொகையும், (1—AA) உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள தொகுதி படித்தொகையும், அஞ்சல் படித்தொகையும், (4—B) உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள தொலைபேசிப் படித்தொகையும் ஓர் உறுப்பினருக்கு, அவர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக விளம்பப்பட்ட தேதியிலிருந்து, அல்லது அத்தகைய விளம்புகையானது, அந்தக் காலியிடம் ஏற்படுவதற்கு முன்பு செய்யப்பட்டால், அந்தக் காலியிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து வந்தடைதல் வேண்டும்:".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.